முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் I பரீட்சை – 2022 யூலை

# (104) வணிகச் சூழல்

(Business Environment)

2022-08-28
பிற்பகல்
[02.00 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** கம்பனியின் பங்குகளை அல்லது தனிச்சங்களைக் கொள்வனவு செய்ய வருமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கின்ற ஒரு ஆவணம் :

(1) பங்குச் சான்றிதழ் (shares certificate) (2) தகவலறிக்கை (prospectus)
(3) பங்கு ஆணைச்சீட்டு (share warrant) (4) கூட்டிணைப்பு சான்றிதழ்

**1.2** கீழ்வருவனவற்றில் வணிக வளங்களின் M7 வகைப்படுத்தலில் **உள்ளடக்கப்படாத** அம்சம் எது?

(1) மனிதன் (2) முறைகள் (3) நேரம் (நிமிடங்கள்) (4) நினைவகம்

**1.3** கீழ்வருவனவற்றுள் பயனுறுதிமிக்க தொடர்பாடல் முறைமையொன்றின் தகைமையாக (quality) இருப்பது எது?

(1) முழுமை (2) விரைவு (3) மரியாதை (4) மேலுள்ள யாவும்.

**1.4** கீழ்வருவனவற்றுள் ஒரு தொழிலதிபர் காப்புறுதி செய்யக்கூடிய இடர் எது?

(1) எதிர்கால நிதிசார் காலப்பகுதியில் ஏற்படக்கூடிய இழப்புகள்

(2) எதிர்கால சந்தையை புரிந்துகொள்ள இயலாமை காரணமான ஏற்படக்கூடிய சேதங்கள்

(3) விபத்துக்களால் ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்கள்

(4) முகாமையாளர்களின் தீர்மானங்கள் காரணமாக ஏற்படக்கூடிய இழப்புகள்

**1.5** பங்குடமையின் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்கின்ற ஆனால் முகாமைத்துவ விடயங்களில் பங்கேற்காத ஒரு பங்காளர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(1) வரையறுக்கப்பட்ட (limited) பங்காளர் (2) தொழிற்படு (active) பங்காளர்

(3) பொதுப் (general) பங்காளர் (4) பெயரளவுப் (nominal) பங்காளர்

**1.6** கீழ்வருவனவற்றுள் எது ஒரு வகை புறக்குறிப்பாகக் (endorsement) **கருதப்படுவதில்லை**?

(1) வெற்றுப் புறக்குறிப்பு (2) கட்டுப்பாட்டு புறக்குறிப்பு

(3) விசேட புறக்குறிப்பு (4) நிபந்தனையற்ற புறக்குறிப்பு

**1.7** கீழ்வருவனவற்றுள் மூலதனச் சந்தையிலுள்ள ஒரு கருவிக்கான உதாரணமாக அமைவது எது?

(1) சாதாரண பங்குகள் (2) வர்த்தகத் தாள்கள்

(3) திறைசேரி உண்டியல்கள் (4) காசோலைகள்

**1.8** கீழ்வருவனவற்றுள் தொழில் முயற்சியாளர் ஒருவரின் பண்பாக **அமையாதது** எது?

(1) புதிய வியாபார வாய்ப்புகள் மீது கவனம் செலுத்துதல்

(2) நெகிழ்வுத்தன்மை இல்லாமை

(3) புத்தாக்கமும் படைப்பாற்றலும்

(4) இடர்களை முகாமை செய்வதற்கான ஆற்றல்.

**1.9** கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** ஊழியர்களின் திறன்களை குறைத்து மதிப்பிடுதல்

**(b)** வியாபார இரகசியங்களைத் திருடுதல்

**(c)** தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டல்

மேலுள்ளவற்றுள், வணிக ஒழுக்கநெறியை மீறுகின்ற சந்தர்ப்பங்களாக அமைபவை :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேற்கூறிய யாவும்.

**1.10** கீழ்வருவனவற்றுள் SME களின் தோல்விக்குப் பங்களிப்புச் செய்யும் உள்ளகக் காரணியாக அமைவது எது?

(1) வங்கிகளிலிருந்து நிதியுதவிகளைப் பெறுவதற்கான ஆற்றலின்மை.

(2) பிரதான வழங்குநர் ஒருவரின் வங்குரோத்து நிலை.

(3) முகாமைத் திறன்கள் மற்றும் நுண்ணறிவு போதாமை.

(4) அரசாங்கக் கொள்கைகளின் மாற்றம்.

*கீழே இல **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது / தவறானது) தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.11** நிறுவனங்கள் தமது நோக்கங்களை அடைவதற்கு வரையறையற்ற வளங்களைக் கொண்டிருக்கின்றன.

**1.12** நிகழ் நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் ஒரு பங்கேற்பாளராக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் காணப்படுகின்றன.

**1.13** பசுமைத் தொழில்முயற்சி என்பது தொழில்முயற்சியின் ஒரு பிரதான போக்கு ஆகும்.

**1.14** காசோலை வரைபவர் (drawee) காசோலை ஒன்றில் ஒரு பொதுவான குறுக்குக் கோடிடலைச் செய்ய முடியும்.

**1.15** ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி பொதுமக்களுக்கு பங்குகளை விநியோகிக்க முடியும்.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.16** பணச் சந்தைக்கும் மூலதனச் சந்தைக்கும் இடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.17** காசோலை ஒன்றை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு (02) விடயங்களைக் குறிப்பிடுக.

**1.18** ஒரு முறைசார் அமைப்புக்கும் ஒரு முறைசாரா அமைப்புக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** தொழில்முயற்சியின் இரண்டு (02) சமூக மற்றும் பொருளாதார நன்மைகளைக் குறிப்பிடுக.

**1.20** இலங்கையில் பெண் தொழில்முயற்சியாளரின் உயர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**சிந்தக்க** மற்றும் **கித்மினா** ஆகியோர் தொழில்முறை ரீதியான கட்டடக்கலை வடிவமைப்பாளர்களாவர். அவர்கள் சமமாக மூலதனமிட்டு அலங்காரப் பொருள்கள் கடையொன்றைத் திறப்பதற்கு ஆர்வமாக உள்ளனர். அவர்களது வியாபாரத்தை வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாகப் பதிவு செய்வது பற்றி **சிந்தக்க** அக்கறை காட்டிய போதிலும் **கித்மினாவுக்கு** அதில் விருப்பம் இருக்கவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியைத் தவிர, தமது வியாபாரத்தைத் தொடங்குவதில் **சிந்தக்கவும் கித்மினாவும்** கருத்திற் கொள்ளக்கூடிய ஒரு சாத்தியமான வியாபார அமைப்பு வகையைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட வியாபார அமைப்பின் மூன்று (03) இயல்புகளை (features) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட வியாபார அமைப்பின் இரண்டு (02) பிரதிகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ஜயநாதன்** என்பவருக்கு களுத்துறையில் ஒரு உருக்குத் தயாரிப்பு வேலைப்பட்டறை உள்ளது. அவர் பல்வேறு வாடிக்கையாளர்களினதும் கட்டளைகளுக்குத் (order) தேவையான உருக்குகளை கொழும்பிலிருந்து வாங்குகிறார். **ஜயநாதன்** பொதுவாக உருக்கு வழங்குநர்களுக்கான கொடுப்பனவைக் காசாகக் கொடுக்கிறார். அவர் முன்னணி வர்த்தக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதுடன் சிலவேளைகளில் சில உருக்கு வழங்குநர்களுக்கு பிற்தேதியிடப்பட்ட காசோலைகளையும் திறந்த காசோலைகளையும் வழங்குகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வியாபார அமைப்பொன்றிற்கு பணம் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய மூன்று (03) நன்மைகளை **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(c) "பிற்தேதியிடப்பட்ட காசோலை" மற்றும் "திறந்த காசோலை" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட ஜிகர் கம்பனி** தேங்காய் உற்பத்தியிலிருந்து கிடைக்கும் ஒரு உப பொருளான தேங்காய் மட்டையைப் பயன்படுத்தி பிரதானமாக ஏற்றுமதிச் சந்தைக்கு பூச்சாடிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்த வியாபாரத்தை ஆரம்பிக்கும்போது, அனைத்து உற்பத்திச் செயன்முறைகளும் பிரதானமாக கைமுறையாகவே மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், காலப்போக்கில் சில செயன்முறைகள் இயந்திர தீவிர செயன்முறைகளுக்கு மாற்றப்பட்டன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) சர்வதேச வர்த்தகத்தில் நுழைவதற்கான மூன்று (03) பிரதான காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு **வரையறுக்கப்பட்ட ஜிகர் கம்பனிக்கு** அரசாங்கம் உதவக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) நாட்டின் அபிவிருத்திக்கு **வரையறுக்கப்பட்ட ஜிகர் கம்பனி** எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பதற்கான இரண்டு (02) வழிமுறைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**கேக் அன்ட் பேக்** என்பது கேக்குகளையும் ஏனைய வெதுப்பக உணவுகளையும் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரு கேக் கடையாகும். இது கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 14 கிளைகளை கொண்டுள்ளது. **கேக் அன்ட் பேக்** அதன் ஒன்லைன் ஓடர் மற்றும் விநியோக வசதிகளுக்காக அதன் வாடிக்கையாளர்களிடையே மிகவும் பிரபலமானதாக விளங்குகிறது. இது அதன் அனைத்துப் போக்குவரத்துத் தேவைகளையும் வெளிமூலமிடுவதன் (outsourced) மூலம் நிறைவேற்றுகிறது. இதனால், அவர்களது மூலப் பொருள்கள் மற்றும் முடிவுப் பொருள்களின் தன்மை காரணமாக போக்குவரத்தை வெளிமூலமிடுவதற்கான பங்காளரைத் தெரிவு செய்வது **கேக் அன்ட் பேக்** கடைக்கு நெருக்கடி மிகுந்த தீர்மானமொன்றாக (critical decision) மாறிவருகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) சிறந்த போக்குவரத்து முறைமை ஒன்றைப் பயன்படுத்துவதால் **கேக் அன்ட் பேக்** பெற்றுக்கொள்ளும் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) போக்குவரத்து முறைமையொன்றின் மூன்று (03) கூறுகளை (elements) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(c) இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரபல்யத்தன்மைக்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**றிச்சி குக்கீஸ் (Richi Cookies)** என்பது இலங்கையிலுள்ள பிரசித்தமான ஒரு பிஸ்கட் வர்த்தக நாமம் ஆகும். இந்த குக்கீகளின் உற்பத்தியை **றிச்சட் முதலிகே** என்பவர் ஒரு குடும்ப வியாபாரமாக 1970 களில் ஆரம்பித்தார். **றிச்சட் முதலிகே** அவர்களின் மனைவியான **ரேணுகா முதலிகே** குக்கீ செய்முறைகளுக்கு சொந்தக்காரர் ஆவார். ஏனெனில், அவர் தனது பொழுதுபோக்காக அவரது குடும்பத்தினருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் குக்கீகளை செய்துகொண்டிருந்தார். பிரதானமாக **ரேணுகா முதலிகேயின்** குக்கீகளில் காணப்பட்ட அபாரமான சுவை காரணமாக அவர்களது நண்பர்கள் இந்த வியாபாரத்தைத் தொடங்குவதற்கு அவர்களை ஊக்குவித்தனர். அந்த ஊக்கத்துடன் அந்தக் காலத்தில் இருந்த பிரமாண்டமான ஹோட்டல்களை மையப்படுத்தி அவர்கள் குக்கீ வியாபாரத்தை ஆரம்பித்தனர். வாடிக்கையாளர் களிடமிருந்து பிஸ்கட் வர்த்தக நாமம் குறித்தான நேர்மறையான கருத்துக்கள் கிடைக்கப்பெற்றன.

கடந்த தசாப்தங்களில், வியாபாரமானது இலங்கையில் பிரபலமான பிஸ்கட் வர்த்தக நாமமாக பரிணமித்தது. இருப்பினும், இந்தப் பரிணாமம் வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்ளும் போது ஏற்றத் தாழ்வுகளால் நிரப்பப்பட்டது. திறந்த பொருளாதாரத்தின் எழுச்சி, சிவில் யுத்தத்தால் ஏற்பட்ட பிரச்சினைகள், அரசியலின் ஸ்திரமற்ற தன்மையும் அரசாங்கக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களும், உலகளாவிய பொருளாதாரத் தாக்கம், பிஸ்கட் நுகர்வு மீதான பொதுமக்களின் மனப்பான்மை மற்றும் விருப்பங்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பன கடந்த ஐந்து தசாப்தங்களாக அவர்கள் எதிர்கொள்ளும் வெளிவாரியான பிரச்சினைகளில் சிலவாகும். சமீபகாலமாக வியாபாரத்திற்குத் தேவையான மூலப்பொருள் களைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இந்த உற்பத்திப்பொருள் களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற பெரும்பாலான மூலப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படும் பொருள்களாக இருப்பதுடன் டொலர் நெருக்கடி காரணமாக சந்தையில் தட்டுப்பாடாக உள்ளன.

மறுபுறத்தில், **றிச்சட் முதலிகே** மற்றும் **ரேணுகா முதலிகே** ஆகியோருக்கு அவர்களையும் அவர்களுடைய வியாபாரத்தையும் கவனித்துக் கொள்வதற்கு சொந்தப் பிள்ளைகள் இல்லை. அவர்கள் மிகவும் திறமையான பல ஊழியர்களுடன் வியாபாரத்தை நடத்திச் செல்கின்றனர்.

தற்போது, 80 வயதாகும் **றிச்சட் முதலிகேயும் ரேணுகா முதலிகேயும்** தமது வியாபாரத்தை ஒப்படைக்க வாரிசு இல்லாததால் இந்த வியாபாரத்தை விற்பதற்காக கொள்வனவாளர் ஒருவரைத் தேடிவருகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **றிச்சி குக்கீஸ்** இன் உள்வாரியான மற்றும் வெளிவாரியான வணிகச் சூழலை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) SWOT ஐப் பயன்படுத்தி சாத்தியமான கொள்வனவாளர் ஒருவரால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய **றிச்சி குக்கீஸ்** இன் வணிகச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) **றிச்சி குக்கீஸ்** இனால் கவனத்தில் கொள்ளப்படக்கூடிய விநியோக வழிமுறையைத் தீர்மானிக்கின்ற மூன்று (03) காரணிகளைக் (determinants) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(d) இலங்கையிலுள்ள SME களால் எதிர்நோக்கப்படுகின்ற மூன்று (03) சவால்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(e) சூழல் நிலைபேற்றுத் தன்மையை அடைந்துகொள்வதற்கு **றிச்சி குக்கீஸ்** எவ்வாறு உதவ முடியும் என்பதற்கான இரண்டு (02) வழிமுறைகளைக் (ways) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |